# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1381/2022 P.W.4

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | கணேசன் | த-பெ | பொன்னையா |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 46/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | டைல்ஸ் கம்பெனி நிறுவனர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **07.04.2026**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து டைல்ஸ் கம்பெனி நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 22.07.2020 அன்று நான் ஜீவாநகர் வழியாக காந்திபுரம் இரண்டாம் வீதியில் உள்ள எங்கள் வீட்டிற்கு சாப்பிடுவதற்காக மதியம் 1.00 மணியளவில் சென்றபோது எனது தங்கை மற்றும் அக்கா ஆகியோர்கள் வீட்டின் முன்பாக கூட்டமாக இருந்தது. போலீசார் அங்கு வந்து ஏற்கனவே நடந்த தகராறு சம்பவம் குறித்து சம்பவ இடத்திற்கு வந்து படம் வரைந்து அங்கு தயார் செய்த ஆவணம் ஒன்றில் கையொப்பம் கேட்டார்கள் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **கையொப்பம் அசாஆ 3**.

குறுக்கு விசாரணை

1. அசா1 மற்றும் அசா2 எனது சகோதரரிகள் என்றால் சரிதான். சம்பவம் தொடர்பாக நான் புகார் கொடுக்க காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை. நான் கையொப்பம் செய்த போது கூட்டம் இருந்தது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் சம்பவம் தொடர்பாக கையொப்பம் பெற்றார்கள். வேறு எதற்காக கையொப்பம் வாங்கினோம் என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தங்கை கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.08 11:14:01 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர், காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1381/2022 P.W.3

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | நாகலிங்கம் | த-பெ | சக்கரையாபிள்ளை |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 70/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஓட்டுநர் ஓய்வு | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.04.2026

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 18.07.2020 அன்று நான் ஜீவாநகர் கழனிவாசல் புதுரோட்டில் உள்ள டீக்கடையில் மதியம் 1.00-1.30 மணியளவில் டீ சாப்பிட்டு கொண்டிருந்தபோது நாதன் டைல்ஸ் கடை அருகே தகராறு சம்பவம் நடைபெற்றது. இது தொடர்பாக காரைக்குடி வடக்கு போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து படம் வரைந்து அங்கு தயார் செய்த ஆவணம் ஒன்றில் கையொப்பம் கேட்டார்கள் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் அசாஆ 2.**

குறுக்கு விசாரணை

1. என்னுடன் கையொப்பம் செய்த மற்றொரு நபரின் பெயர் தெரியுமா என்றால் தெரியும். அவரின் பெயர் என்ன என்றால் கணேசன். மேற்படி கணேசன் யார் என்றால் அசா1 ன் அண்ணன். அசா2 ன் தம்பி. நான் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் ஒரு கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்றால் வரைபடம் வரைந்தார்கள். அதில் என்ன விபரம் இருந்தது என்றால் தெரியாது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.08 11:14:07 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர், காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1381/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | அழகுமீனாள் | க-பெ | சுந்தர மூர்த்தி |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 59/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | துணி வியாபாரம் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.04.2026

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து துணி வியாபாரம் செய்து வருகிறேன். அசா1 எனது தங்கை. ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது கணவரின் தம்பி. கடந்த 18.07.2020 அன்று ஜீவாநகரில் எங்கள் உறவினர்கள் சம்பவ சமயத்தில் அவர்களாகவே வீடு கட்டி கொண்டார்கள். மேற்படி வீடு கட்டியது தொடர்பாக ஆஜர் எதிரிக்கும் வெங்கடேஷ் குமார் மற்றும் முத்து கிருஷ்ணன் ஆகிய எனது கணவரின் தம்பிகளுக்கும் பிரச்சனை இருந்து வந்தது. முத்துகிருஷ்ணன் சம்பவ சமயத்தில் வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்றுவிட்டார். ஆஜர் எதிரி வெங்கடேஷ் குமார் என்பவர் சம்பவ சமயத்தில் மது அருந்திவிட்டு இரவு 11.00 மணியளவில் அசா1 ன் வீட்டிற்கு சென்றபோது அவர் அவரது கணவரிடம் போனில் பேசிக்கொண்டிருந்தார். மேற்படி எதிரியானவர் அந்த போனை அவரிடம் இருந்து பிடுங்கி கீழே போட்டு உடைத்துவிட்டார். மேலும் எதிரியானவர் அவரது காலில் அணிந்திருந்த செருப்பை எடுத்து அசா1ன் தலையில் தாக்கினார். அப்போது ஆஜர் எதிரியை அங்கிருந்தவர்கள் அங்கிருந்து அழைத்து கொண்டு அவரது வீட்டிற்குள் அழைத்து சென்று விட்டார்கள். அசா1 க்கு தலையில் ஆஜர் எதிரி அடித்ததால் அவருக்கு வலிப்பு ஏற்பட்டதால் முதலுதவிக்காக வீட்டில் வைத்து தலைக்கு ஒத்தடம் கொடுத்தோம். பின்னர் காவல் நிலையம் சென்று நடந்த விபரங்களை சொல்லி அசா1 புகார் அளித்தார். சம்பவ சமயத்தில் போலீசார் வந்து விசாரணை செய்தார்கள். மேற்படி விபரங்களை நான் அவர்களிடம் சொன்னேன்.

குறுக்கு விசாரணை

1. புகாரை எழுதியது யார் என்றால் அசா1 தான் எழுதினார். புகாரை எப்போது யாரிடம் எங்கு வைத்து கொடுத்தோம் என்றால் காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் மறுநாள் மதியம் இருக்கும் நேரம் சரியாக நியாபகம் இல்லை. யார்யார் காவல் நிலையம் சென்றோம் என்றால்

புகார்தாரர், நான், எனது தம்பி கணேசன் ஆகியோர் சென்றோம். போலீசார் என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் அப்போதே காவல் நிலையத்தில் வைத்து போலீசார் விசாரணை செய்தார்கள். எதிரியையும் அழைத்து வந்து அன்றே விசாரணை செய்தார்கள். மறுநாள் போலீசார் வீட்டிற்கு வந்து விசாரணை செய்தார்கள். மற்றும் அருகில் இருந்தவர்களையும் விசாரணை செய்தார்கள். அசா1ன் வீட்டிற்கு எதிர்புறம் உள்ள மாடியில் தான் எனது வீடு உள்ளது என்றால் சரிதான். நான் என் வீட்டின் கதவை திறந்து மாடி படியில் வரும் போது எதிரி அசா1 ஐ அடித்ததை பார்த்தேன்.

2. என் வீட்டிற்கு எதிரே அசா1 வீடு, எதிரி வீடு மற்றும் ஐயப்பன் வீடு ஆகியோர்கள் வீடு ஒன்றாக அமைந்துள்ளது என்றால் சரிதான். இரவு 11.00 மணிக்கு சம்பவம் நடைபெற்றதால் அசா1ன் வீட்டின் கதவும் எனது வீட்டின் கதவும் மூடியிருக்கும் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தங்கைக்கு வலிப்பு நோய் வந்தது அவரின் கடைசி குழந்தை பிறந்தபோது வந்தது என்றால் சரிதான் தற்போது தான் தொடர்ந்து மருத்துவம் செய்துவருகிறார். என்னை போலீசார் எந்த தேதியில் விசாரணை செய்தார்கள் என்றால் சரியாக தேதி நியாபகம் இல்லை. எதிரி அசா1ன் வீட்டிற்கும் பணம் செலவழித்து கட்டி தற்போது வரை மேற்படி பணம் தரவில்லை என்பதால் தான் அவர்களுக்கு இடையில் பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். இன்றைய தினம் வரை மேற்படி பணத்தை திருப்பி கொடுக்கவில்லை என்றால் எதிரி தரப்பில் 4,85,000 ரூ கேட்டார்கள் நான் நகைகளை அடகு வைத்தும் வட்டிக்கு பணம் வாங்கியும் கொடுத்தோம். எதிரி என் தம்பிக்கு சும்மா கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டதால் பணத்தை பெறவில்லை. மேற்படி விபரங்களை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரி பணம் வாங்க தயாராக உள்ளார் கொடுக்க தயாரா என்றால் இல்லை. இதுபோன்ற பொய்யான வாக்குறுதிகளால் அவரை ஏமாற்றியதால் தான் பிரச்சனை நடைபெறுகிறது என்றால் சரியல்ல. நானும் அசா1 இருவரும் சேர்ந்து எதிரியின் பணத்தை மோசடி செய்கிறோம் என்றால் சரியல்ல. எதிரி செலவு செய்த மொத்த தொகை ரூ.700000 அந்த தொகைக்கு ஒத்து வராததால் எதிரி தொகையை பெற மறுத்துவிட்டார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.08 11:14:13 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
C.C. No.1381/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | தமிழ்செல்வி | க-பெ | முத்துகிருஷ்ணன் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 36/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.04.2026

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது கணவரின் அண்ணன். கடந்த 18.07.2020 அன்று ஜீவாநகரில் என்னுடைய மாமனாருக்கு சொந்தமான இடத்தில் எனது கணவர் மற்றும் அவரது சகோதரர் சகோதரரிகள் சேர்ந்து வீடு கட்டினோம். அப்போது ஆஜர் எதிரி சற்று கூடுதல் இடத்தை ஆக்கிரமித்து வீடு கட்டிவிட்டார். இது தொடர்பாக ஆஜர் எதிரி குடும்பத்தாருக்கும் எங்கள் குடும்பத்திற்கும் பிரச்சனை ஏற்பட்டது. 18.07.2020 அன்று நான் வெளிநாட்டில் உள்ள எனது கணவருக்கு இரவு 11.00 மணியளவில் எனது வீட்டில் இருந்து தொலைபேசி மூலம் நான் பேசிக்கொண்டிருந்தபோது அப்போது அங்கு வந்த ஆஜர் எதிரியானவர் தகாத வார்த்தைகளால் புண்டை மகளே போன்ற வார்த்தைகளால் திட்டி என்னை செருப்பை கொண்டு எனது தலையில் அடித்துவிட்டார். பின்னர் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு மறுநாள் காரைக்குடி வடக்கு காவல் நிலையம் சென்று நடந்த விபரங்களை சொல்லி புகார் அளித்தேன். **புகார் அசாஆ 1.** ஆஜர் எதிரியானவர் என்னை தாக்கியதற்கு பிறகு தொடர்ச்சியான நான் மருத்துவமனை சென்று மாதம் ஒருமுறை வலிப்பு நோய்காக சிகிச்சை எடுத்து வருகிறேன். எதிரி என்னை தாக்கியது தொடர்பாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

1. புகாரை எழுதியது யார் என்றால் நான் தான் எழுதினேன். புகாரை யாரிடம் எங்கு எப்போது

கொடுத்தேன் என்றால் காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் சம்பவத்திற்கு மறுநாள் கொடுத்தேன். என்னை போலீசார் எங்கு எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் புகார் கொடுத்த அன்று காலை 8.00 மணிக்கு போலீசார் எங்கள் வீட்டிற்கு வந்து விசாரணை செய்தார்கள். நான் புகார் கொடுத்தது 20.07.2020 என்றால் சரிதான் சம்பவம் நடந்த இரவே நாங்கள் காவல் நிலையம் சென்றுவிட்டோம். காவல் துறையினர் சம்பவத்தை தெளிவாக எழுதி கொண்டுவருமாறு சொன்னதால் மறுநாள் புகார் அளித்தோம். எனவே 20.07.2020 அன்று புகாரை எழுத்து பூர்வமாக அளித்தேன். மேற்படி விபரங்களை நான் பின் யோசனையிட்டு கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னை போலீசார் விசாரணை செய்தது எப்போது என்றால் சம்பவம் நடந்த அன்றே எனது வீட்டில் வைத்து விசாரணை செய்தார்கள். அதற்கு பின்பு விசாரணை செய்யவில்லை. போலீசார் என்னை 23.07.2020 அன்று விசாரணை செய்தார்களா என்றால் செய்தார்கள். எங்கு எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் எனது வீட்டில் வைத்து அன்றைய தினம் காலை விசாரணை செய்தார்கள் சரியான நேரம் நினைவில் இல்லை. மேற்படி சாட்சியமும் பின் யோசனையிட்டு தான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அசா2 எனது அக்கா எனது வீட்டிற்கு எதிர் உள்ள வீட்டு மாடியில் குடியிருக்கிறார் என்றால் சரிதான்.

2. அசா2 சம்பவத்தின்போது அவரது வீட்டில் இருந்துவிட்டு எதிரியுடன் பிரச்சனைக்கு பின்னர் தான் வந்தார் என்றால் சரிதான். நான் மற்றும் எதிரி அவரது அண்ணன் ஐயப்பன் வீடு ஒன்றாக மூன்று வீடுகளாக உள்ளது என்றால் சரிதான். பிரச்சனை நடந்திருந்தால் ஐயப்பன் என்பவருக்கும் தெரிந்து இருக்கும் என்றால் சரிதான். எதிரி என்னை தாக்கியதற்கு மருத்துவமனை சென்று சிகிச்சை பெறவில்லை என்றால் சரியல்ல. எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றால் தற்போது நினைவில் இல்லை. எப்போது இருந்து வலிப்பு நோய் எனக்கு வந்தது என்றால் 2016 முதல் இருக்கிறது. புகாரில் எதிரி என்ன வார்த்தை அசிங்கமாக பேசினார் என்று நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது கணவரின் கால் ஊனத்தை எதிரி கிண்டல் செய்ததாக நான் புகாரில் சொல்லியுள்ளேன் என்ன வார்த்தை சொல்லி கிண்டல் செய்தார் என்று நான் தெளிவாக சொல்லவில்லை என்றால் சரிதான். எனது அக்கா கணவர் சுந்தரமூர்த்தி தனியாக கடையும் வீடும் எங்கள் வீட்டிற்கு எதிரே கட்டி கொண்டு தனியாக சென்றுவிட்டார் என்றால் சரிதான். எனது கொழுந்தனார்கள் மங்களநாதன், மாரிமுத்து இருவரும் தனித்தனியாக வேறு இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். என்னுடைய கணவரின் சகோதரரிகளும் தனியாக வீடு கட்டி கொண்டு வாழ்கிறார்கள் என்றால் சரிதான்.

3. மூன்று வீடுகளில் ஒரு வீடு ஐயப்பன் தனியாக பணம் கொடுத்தும் மற்ற இரு வீடுகளில் ஒரு

வீட்டில் என் கணவருக்காக எதிரி பணம் போட்டு கட்டி அதற்கான பணம் கொடுக்கவில்லை என்று சிவில் வழக்கு நடந்து வருகிறது என்றால் சரிதான். ஆனால் தற்போது எனது கணவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி பணத்தை கேட்பதால் தான் எங்கள் இருவருக்கும் தகராறு ஏற்பட்டது என்றால் சரிதான். என்னை செருப்பால் அடித்ததாக சொல்லும் செருப்பை கைப்பற்றினார்களா என்றால் இல்லை. எனது கணவரிடம் தான் போனில் பேசிக்கொண்டிருந்தேன் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. போன் உடைந்ததற்கான புகைப்படம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி தங்களுடைய வீட்டிற்கும் பணம் செலவழித்ததை கேட்டதால் அதற்கு நடக்காத சம்பவத்தை எதிரி மீது வழக்கு தாக்கல் செய்து அதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.08 11:14:20 +0530